விடுநர்

டாக்டர். கே. கோபால், இ.ஆ.ப.,
பேரூராட்சிகளின் ஆணையர்,
குறளகம், சென்னை – 108.

பெறுநர்

அனைத்து மண்டல பேரூராட்சிகளின்உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண். 337/2008/இ.2.நாள்.4–2–2008**

அய்யா,

பொருள்: விழாக்கள் – பேரூராட்சிகள் துறை – பேரூராட்சிகளில் நடைபெறும் விழாக்கள் / கூட்டங்கள் – அழைப்பிதழ் / கல்வெர்ட்டில் மரபுச் சீர்முறை அலுவலர்கள் முறை அனுப்புதல் / பதித்தல் – தொடர்பாக

பார்வை : தொடர்புடைய ஆவணங்கள்

பேரூராட்சிகளில் நடைபெறும் அரசு சார்பான விழாக்கள் / கூட்டங்களில் பங்கேற்க அழைக்கும் அழைப்பிதழில் சம்பந்தப்பட்ட மரபுச் சீர்முறை அலுவலர்களின் பெயர்களை அச்சிடுதல் மற்றும் விழாக்களில் பங்கு பெறும் மாண்புமிகு அமைச்சர்கள்/சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்கள்/முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர்களது பெயர்களை மரபு வழி சீர்முறைப்படி கல்வெட்டுகளில் பொறித்தல் போன்றவை முறையாக செயல்படுத்தவில்லையென புகார்கள் வரப்பெற்றுள்ளன.

எனவே இனி வருங்காலங்களில் பேரூராட்சிகளில் நடைபெறும் அரசு சார்பான விழாக்கள்/கூட்டங்களில் பங்கேற்கும் மாண்புமிகு அமைச்சர்கள்/சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்கள்/முக்கிய பிரமுகர்கள்/மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றம் அரசு அலுவலர்கள் அவர்களது பெயர்களை அழைப்பிதழ்களில் மரபு வழி சீர்முறைப்படி அச்சிடவும் மற்றும் விழாக்களில் பங்கேற்கும் மேற்குறித்த அனைத்து அரசு மற்றும் அரசு சாரா அலுவலர்களின் பெயர்களை மரபுச் சீர்முறைப்படி (Protocol Procedures) கல்வெர்டில் முறையாக பொறிக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதனை அனைத்து மண்டல பேரூாட்சிகளில் உதவி இயக்குநர்களும் விழிப்புடன் கண்காணிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்பொருள் தொடர்பாக அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்குவதுடன், வழங்கப்பட்ட அறிவுரையின் விவரத்தினை இவ்வியக்கத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஓம்/– கே. கோபால்**
ஆணையர்

நகல் ஆணையரின் நேர்முக எழுத்தர்

நகல் இ2